வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 13.03.2026 வெள்ளிக்கிழமை | இதழ் : 67 | பக்கங்கள் : 08

## இந்திய டிஸ் ரி.வி. சேவை பாவனை சட்டவிரோதமானது!

### யாழில் பல வர்த்தக நிலையங்களில் பொலிஸார் நேற்று அதிரடி நடவடிக்கை

*யாழ்ப்பாணம், மார்ச் 13*


சட்டவிரோத இந்திய செய்மதி தொலைக்கட்சி சேவைகளை விற்பனை செய்யும் நிறுவனங்களில் மீது பொலிஸார் தேடுதல் நடத்தியதுடன் பல வர்த்தக நிறுவனங்களில் விற்பனைக்கு இருந்த உபகரணங்களை கைப்பற்றினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சில வர்தத்க நிலையங்களில் பொலிஸார் நேற்று சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய பொலிஸார் இந்த நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்தியாவில் ஒளிபரப்பாகும் செய்மதி தொலைக்கட்சி சேவைகளை இலங்கையில் விற்பனை செய்வதோ அல்லது பார்வையிடுவ தன்மூலம்

07



## அரசியல் தலையீடுகள் இல்லாத வீடமைப்பு பயனாளிகள் தெரிவு!

### வடக்கு மாகாண ஆளுநர் பெருமிதம்

*முல்லைத்தீவு, மார்ச் 13*

நான் மாவட்ட செயலாளராகப் பணியாற்றிய காலங்களில் வீட்டுத்திட்டங்களுக்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது பல்வேறு அரசியல் தலையீடுகள் இருந்தன. ஆனால், தற்போது மாகாண சபையால் நடைமுறைப்படுத்தப்படும்

07



## யாழ்.பழைய பூங்காவில் உள்ளக அரங்கு அமைக்க தடையை நீடித்தது நீதிமன்றம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 13*

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை யாழ். மாவட்ட நீதிமன்றம் விலக்கிக் கொண்டமையை ஆட்சேபித்து வடக்கு மாகாண மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு மற்றும் மேன்முறையீட்டு மனு ஆகியவற்றைப் பரிசீலனைக்கு எடுத்த மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றம், மீளாய்வு மனு மற்றும் மேன்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை முடிவடையும் வரை இந்தக் கட்டுமானத்துக்கு எதிரான இடைக்காலத் தடையை நீடித்து நேற்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

இரண்டு நீதிபதிகளைக் கொண்ட ஆயம் நேற்று

07

## மயிலிட்டி மக்களின் காணிகள் மிகவிரைவில் விடுவிக்கப்படும்!

### கடற்றொலில் அமைச்சர் உறுதி

*யாழ்ப்பாணம், மார்ச் 13*

மயிலிடியில் பாதுகாப்பு தரப்பிடமுள்ள பொது மக்கள் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மயிலிட்டி மக்களிடம் உறுதியளித்துள்ளார்.

மயிலிட்டி மக்களின் கோரிக்கைக்கு அமைவாக நேரடியாக அங்கு சென்ற அமைச்சர் அவர்களோடு உரையாடும்போதே, பாதுகாப்பு தரப்பிடம் உள்ள காணிகள் இவ்வருட இறுதிக்குள்

07

## சிறிலங்கன் எயார்லைன்ஸ் முன்னாள் அதிகாரி கைது!

*கொழும்பு, மார்ச் 13*

எயார்பஸ் ஒப்பந்தம் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக சிறீலங்கன் விமான நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் அளிக்க இன்று காலை அவர் இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்திற்கு சென்றார். நீண்ட வாக்குமூலத்தைப் பதிவு செய்த பின்னர் கபில சந்திரசேன கைது செய்யப்பட்டார்.

(அ)

## சுரேஷ் சாலே மீது 3 குற்றச்சாட்டுகள்!

### நீதிமன்றில் சி.ஐ.டி. அறிக்கை

*கொழும்பு, மார்ச் 13*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, மூன்று முக்கிய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றார்.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய் வுப் பிரிவின் நேற்று முன் தினம்

07

## மத்திய கிழக்கு போர்ச் சூழ்நிலை இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தல்!



### மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை

*கொழும்பு, மார்ச் 13*

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் இலங்கையின் எதிர்காலத்திற்கு பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம - அகுருகொட ஸ்ரீ மங்களராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சைத்தியத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டதன் பின்னர்,

07

## இந்தியாவிடம் எரிபொருள் கோருகிறது இலங்கை அரசு!

### இந்திய வெளியுறவு அமைச்சு தகவல்

*கொழும்பு, மார்ச் 13*

இலங்கை, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் பெற்றோலியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் ஊடகப் பேச்சாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

“அண்டை நாடுகளுக்கு முதலிடம்“ என்ற கொள்கையின் அடிப்படையில் இந்தக்

07

## மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தியேக பேருந்து சேவை

### அடுத்த மாதம் முதல் அறிமுகம்

*கொழும்பு, மார்ச் 13*

மாற்றுத்திறனாளிகளின் பயணச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் அடுத்த மாதம் முதல் பிரத்தியேக பேருந்து சேவையை ஆரம்பிக்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நடவடிக்கையானது “தூய்மையான இலங்கை” திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன் கூடிய 430.7 மில்லியன்

07

## பொலிஸ் சூட்டில் சிறுவன் உயிரிழப்பு” வழக்கு கொழும்பு சி.ஐ.டிக்கு மாற்றம்!

### ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு

*யாழ்ப்பாணம், மார்ச் 13*

அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றுமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

அல்லைப்பிட்டி பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி அதிகாலைவேளை பயணித்த ஹைஏஸ் ரக வாகனத்தை பொலிஸார்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

### மின்சார சபை மறுசீரமைப்பு

# தெளிவான திட்டமின்றி முன்னெடுப்பது ஆபத்து

## நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 13

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் முன்மொழிவு குறித்து இலங்கை பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், தெளிவான இடைக்காலத் திட்டங்கள் இன்றி இந்த நிறுவனத்தை உடைப்பது, நிர்வாகச் சிக்கல்களையும் நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்கும் என அவர் எச்சரித்துள்ளார்.

56 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட இலங்கை மின்சார சபையை, தெளிவான மூலோபாயம் இன்றி ஆறு அரச நிறுவனங்களாகப் பிரிப்பது அர்த்தமுள்ள சீர்திருத்தம் ஆகாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான விடயம் தற்போது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ள நிலையில், அதை மீறி முன்னெடுப்பது சுமார் 22,000 ஊழியர்களின் எதிர்காலத்தை நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளும் என்றும், பொறுப்புக்கூறல் மற்றும் நிர்வாகம் குறித்த பாரதூரமான கேள்விகளை எழுப்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சொத்தாகக் கருதப்படும் ஒரு நிறுவனத்தைப் பிரித்துவிட்டு, அந்த நிறுவனங்களுக்குச் சேவை செய்யும் ஊழியர்களை அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டாம் என்று கூறுவது நிர்வாகக் குழப்பத்தை ஏற்படுத்தும் என நாமல் தெரிவித்துள்ளார்.

மின்சார விநியோகம் என்பது நாட்டின் பொருளாதார மீட்பு, கைத்தொழில் வளர்ச்சி மற்றும் தேசிய பாதுகாப்புக்கு மிக முக்கியமானது.

எனவே, எவ்வித சீர்திருத்தங்களும் நிறுவனங்களை வலுப்படுத்துதல், மின் விநியோக ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல், ஊழியர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் நுகர்வோரைப் பாதுகாத்தல் போன்ற அம்சங்களை உறுதிப்படுத்தவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

(அ)

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்!

கொழும்பு, மார்ச் 13

புத்தல பகுதியில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற மரதன் பயிற்சி ஓட்டத்தின்போது 15 வயதுடைய மாணவன் ஒருவன் திடீரென உயிரிழந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தைத் தொடர்ந்து, விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் விளையாட்டுதுறை சார் மருத்துவர் ருவன் ஜயசூரிய, இந்த முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அதன்படி, எந்தவொரு விளையாட்டுப் போட்டியிலும் பங்கேற்பதற்கு முன்னதாக, மாணவர்கள் தங்களின் உடல் தகுதியை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

போட்டி நடைபெறுவதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவேனும் முறையான மருத்துவ சான்றிதழைப் பெற்றிருக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாணவர்களின் நலனுக்காக நாடு முழுவதும் 1,000 இற்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் இந்த மருத்துவர்களிடம் சென்று அடிப்படை பரிசோதனைகளை மேற்கொண்டு, தாங்கள் விளையாட்டுக்கு தகுதியானவர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஏதேனும் உடல்நலச் சிக்கல்கள் கண்டறியப்பட்டால், குறித்த வைத்தியர்கள் மாணவர்களை நிபுணத்துவ மருத்துவர்களிடம் மேலதிக சிகிச்சைக்காக பரிந்துரைப்பார்கள்.

விளையாட்டுப் பயிற்சிகளை அதிகாலை வேளையிலோ அல்லது மாலை 4 மணிக்குப் பின்னர் வெயில் தணிந்த பின்னரோ மேற்கொள்ளவேண்டும்.

கடும் வெயிலில் பயிற்சிகளை மேற்கொள்வது "ஹீட் ஸ்ட்ரோக்" எனப்படும் உயிருக்கு ஆபத்தான வெப்பத்தாக்க நிலையை ஏற்படுத்தக்கூடும் என மருத்துவர் ருவன் ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# மத்திய கிழக்கு மோதல்களால் கடும் சுகாதார நெருக்கடி நிலை!

## உலக சுகாதார நிறுவனம் கவலை

நியூயோர்க், மார்ச் 13

மத்திய கிழக்கில் நீடித்து வரும் போர்ச் சூழல் காரணமாக ஈரான், லெபனான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் சுகாதாரக் கட்டமைப்புகள் வரலாறு காணாத நெருக்கடியைச் சந்தித்து வருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த பத்து நாட்களில் மட்டும் ஈரானில் 1,300 இற்கும் அதிகமானோரும், லெபனானில் 570க்கும் அதிகமானோரும் உயிரிழந்துள்ள நிலையில், பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

துரதிர்ஷ்டவசமாக, உயிர் காக்கும் மருத்துவ நிலையங்களே இலக்கு வைக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள உலக சுகாதார நிறுவனம், பெப்ரவரி 28 முதல் ஈரானில் 18 தாக்குதல்களும், லெபனானில் 25 தாக்குதல்களும் சுகாதார நிலையங்கள் மீது நடத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதல்களில் பல சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்படுவதாகவும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

மறுபுறம், போரினால் ஏற்பட்டுள்ள பாரிய இடப்பெயர்வுகள் பெரும் பொதுச் சுகாதார அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன.

ஈரானில் ஒரு இலட்சம் பேரும், லெபனானில் சுமார் 7 இலட்சம் பேரும் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்கள் தங்கியுள்ள தற்காலிக முகாம்களில் போதிய நீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லாததால் சுவாச நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, இஸ்ரேலிய இராணுவத்தின் வெளியேற்ற உத்தரவுகளால் லெபனானில் 5 மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன.

அத்துடன், டுபாயில் உள்ள உலக சுகாதார நிறுவனத்தின் விநியோக மையத்திலிருந்து 25 நாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசர மருத்துவப் பொருட்கள் விமானப் போக்குவரத்து கட்டுப்பாடுகளால் தேங்கியுள்ளன என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

(அ)

# 5 இந்திய மீனவர்கள் கைது!

மன்னார், மார்ச் 13

இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்த தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் குறித்த மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் அவர்களின் படகை வழிமறித்துள்ளனர்.

எனவே மேற்குறித்த மீனவர்களை கைது செய்துள்ளதோடு, அவர்களின் மீன்பிடிப் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைதான மீனவர்கள் மேலதிக விசாரணைக்காக மன்னாரிலுள்ள கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

(அ)

# ஈரான் கப்பல் மீது தாக்குதல் மௌனம் காக்கும் இலங்கை

## ஜி.எல்.பீரிஸ் விமர்சனம்



கொழும்பு, மார்ச் 13

அமெரிக்கா ஈரானின் கடற்படை கப்பல் மீது மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக இலங்கை மௌனம் காத்திருப்பதை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடுமையாக விமர்சித்துள்ளார்.

தற்போதைய சூழலில் நாட்டிற்கு தெளிவான வெளிநாட்டு கொள்கையே இல்லை என அவர் குற்றஞ்சாட்டினார்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகச் சந்திப்பில் பேசிய அவர், இலங்கையின் வெளிநாட்டு கொள்கை நல்லதா கெட்டதா என்பது பிரச்னை அல்ல, மாறாக நாட்டுக்கு எந்தவித வெளிநாட்டு கொள்கையும் இல்லாததே உண்மையான பிரச்னை என தெரிவித்தார்.

பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் அரசாங்கம் தெளிவான நிலைப்பாடு எடுக்காமல் மௌனமாக இருப்பது கவலைக்குரியது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா ஈரானின் கப்பல் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு அரசாங்கம் பதிலளிக்காமல் இருப்பது நாட்டின் மூலோபாய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டால் ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் விமர்சித்தார்.

(அ)

# 40 வீத சம்பள உயர்வு கோரும் மின்சாரத்துறை ஊழியர்கள்!

கொழும்பு, மார்ச் 13

மின்சாரத் துறை தொழிற்சங்கங்கள் 40 வீத சம்பள உயர்வைக் கோரியுள்ளன. அந்தக் கோரிக்கை வழங்கப்பட்டால், மின்சாரக் கட்டணங்களை சுமார் 100 வீத அதிகரிக்க வேண்டியிருக்கும் என்று தேசிய மின்விநியோக வலையமைப்பு சேவை வழங்குநர் நிறுவனத்தின் தலைவர் நுசித் குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

மின்சார தொழிற்சங்கங்கள் 64 கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இவற்றில் 62 கோரிக்கைகள் ஏற்கனவே இணக்கம் காணப்பட்டுள்ளது.

மீதமுள்ள இரண்டு கோரிக்கைகள் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுடன் கலந்துரையாடலுக்கு அனுப்பப்பட்டன.

40 வீத சம்பள உயர்வு என்பது மாதத்திற்கு 1.8 பில்லியன் ரூபா மேலதிக செலவாகும், இது ஆண்டொன்றுக்கு 22 பில்லியன் ரூபாவாகும்.

2025 டிசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி மின்சார சபையின் நட்டம் 35 பில்லியன் ரூபாவாக உள்ளது.

இந்த நிலையில் சம்பளத்தை உயர்த்தினால், மக்கள் மற்றும் தொழிற்சாலைகள் மீது சுமையை ஏற்றி மின் கட்டணத்தை 100 வீதம் அதிகரிக்கவேண்டியிருக்கும்-என்றார்.

(அ)

# ஏப்ரல் மாதம் இறுதி வரை தேவையான எரிபொருள்!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

இலங்கையில் ஏப்ரல் மாதம் இறுதி வரை தேவையான அளவு எரிபொருள் கையிருப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அதற்காக தேவையான எரிபொருள் கப்பல் முன்கூட்டியே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தாகவும் அவர் கூறினார். இதன்படி ஏப்ரல் 14-15, 17-18, 21-22 மற்றும் 29-30 ஆகிய திகதிளுக்கு இடையில் எரிபொருள் ஏற்றிய நான்கு கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் கப்பல்கள் அனைத்தும் இந்தியாவிலும் சிங்கப்பூரிலும் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கப்பல்கள் துறைமுகத்தில் இறக்கும் நேரத்தில் நிலவும் சந்தை விலைக்கேற்ப இந்த எரிபொருள் வாங்கப்படும் என்றும் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ. ராஜகருணா தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
13.03.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு மேலும் பின்னடைவு

2022 பொருளாதார வீழ்ச்சியில் இருந்து படிப்படியாக மீண்டுவரும் போது இடைக்கிடை அந்த மீட்சியைப் பாதிக்கக் கூடியதாக நிகழ்வுகள் இடம்பெற்று விடுகின்றன.

கடந்த வருட பிற்பகுதியில் டித்வா சூறாவளி ஏற்படுத்திய அழிவுகள் பொருளாதார மீட்சியைக் கடுமையாகப் பாதித்தன. தற்போது வளைகுடாப் பிராந்தியத்தில் அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டுக்கும் ஈரானுக்கும் இடையில் தொடருகின்ற போர் மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் ஆபத்து வந்திருக்கிறது.

அரபு நாடுகளில் அமெரிக்க படைத் தளங்கள் மீது ஈரான் மேற்கொள்ளத் தொடங்கிய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் தற்போது அந்த நாடுகளின் பொருளாதார. உட்கட்டமைப்புக்கள் மீதான தாக்குதல்களாக விரிவடைந்திருக்கின்றன. குவைத், கட்டார், பஹ்ரெய்ன், சவூதி அரேபியா மற்றம் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவற்றின் எண்ணெய்வள உட்கட்டமைப்புக்கள் மீதான தாக்குதல்கள் பிராந்திய மட்டத்தில் போரை விரிவடையச் செய்யும் ஆபத்தை அதிகரித்திருக்கின்றன.

அயல் அரபு நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைத்தளங்களில் இருந்து ஈரானை நோக்கிய தாக்குதல்கள் நடத்தப்படாவிட்டால் அந்த நாடுகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதில்லை என்று தெஹ்ரான் அறிவித்திருந்த போதிலும், அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடர்ந்து பொழிகின்ற குண்டு மழை நிலைவரத்தை மேலும் பயங்கரமானதாக மாற்றுகிறது.

எரிபொருள் இறக்குமதி, ஏற்றுமதிச் சந்தைகள் மற்றும் வெளிநாடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனும்பும் பணம் ஆகியவற்றக்காக மத்திய கிழக்கின் மீது பெருமளவுக்கு தங்கியிருக்கும் இலங்கை அதன் பொருளாதார மீட்சியைப் பொறுத்தவரை மீண்டும் பெரும் பின்னடைவைச் சந்திக்கப் போகிறது பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

மேற்காசியாவின் குழப்பநிலை எண்ணெய் விநியோகத்தைக் குறைத்து விலைகளை அதிகரிக்கவைக்கிறது. இலங்கை சகல எரிபொருள் தேவைகளுக்கும் இறக்குமதியிலேயே தங்கியிருப்பதன் காரணத்தால், வர்த்தகப் பற்றாக்குறை விரைவாக விரிவடைந்து பணவீக்கத்தை அதிகரிக்கப்போகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

வளைகுடாவில் போர் நீடிக்குமானால் எண்ணெய் விலைகள் அதிகரிப்பு, வர்த்தக கப்பல் போக்குவரத்தின் சீர்குலைவு மற்றும் வெளிநாடுகளில் வேலை செய்வோர் அனுப்பும் பணத்தில் வீழ்ச்சி ஆகியவை உடனடியாக இலங்கையைப் பாதிக்கப் போகிறது.

மத்திய கிழக்கு நிலைவரத்தின் தாக்கத்தை உலகச் சந்தைகள் ஏற்கெனவே உணரத் தொடங்கி விட்டன. மசகு எண்ணெயின் விலை 15 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்சி தொடர்ந்தும் வலுவற்றதாகவே இருக்கப்போகிறது.

இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகளில் காணப்படக்கூடியதாக இருந்த ஓரளவிலான உறுதிப்பாட்டுக்கு சுற்றுலாத்துறை மூலமான வருவாயும் வெளிநாடுகளில் இருந்து தொழிலாளர்கள் அனுப்பும் பணமுமே அதற்கு முக்கிய காரணிகளாக் இருந்து வந்தன. இப்போது அந்த இரண்டு மார்க்கமுமே நிலைகுலைவுக்கு உள்ளாகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஏற்றுமதித் துறையும் கூட நெருக்கடியை எதிர்நோக்கத் தொடங்கியிருக்கிறது. இலங்கையின் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளில் ஈரான், ஈராக் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவை முக்கியமானவை.

நான்கு வருடங்களுக்கு முன்னர் இலங்கை பொருளாதார வங்குரோத்து நிலையை அடைந்தபோது இந்தியா செய்த அவசர நிதியுதவிகளே இலங்கையை மூச்சுவிட வைத்தன. டித்வாவுக்கு பின்னரும் இந்தியாவே பெருமளவுக்கு உதவியது. மத்திய கிழக்குப் போரின் தாக்கத்தினால் தற்போது இந்தியாவும் கூட எரிபொருள் இறக்குமதி உட்பட பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் நிலையில் இலங்கைக்கு முன்னரைப் போன்று உதவக்கூடிய நிலை இருக்குமா என்ற கேள்வி எழுகிறது.

# தொடர்ந்து குண்டுவீச்சுக்களை நடத்துவது ஈரானுடனான தகராறுக்கு தீர்வைக் கொண்டுவராது



அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டுத் தாக்குதலில் அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்துல்லா அலி காமெனி பெப்ரவரி 28 ஆம் திகதி கொல்லப்பட்டதை தொடர்ந்து புதிய ஆன்மீகத் தலைவராக அவரது மகன் அயத்துல்லா மொஜ்தாபா காமெனியை தெரிவு செய்ததன் மூலமாக, முன்னைய ஆட்சியின் தொடர்ச்சியை உறுதி செய்திருப்பதுடன் அமெரிக்காவுக்கும் மேற்குலகிற்கும் எதிராக துணிச்சலையும் வெளிக்காட்டியிருக்கிறது.

ஈரான் நிபந்தனையற்ற முறையில் சரணடைய வேண்டும் என்று கடந்த வாரம் கேட்டுக் கொண்டதன் மூலமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இளம் காமெனியின் தெரிவு தனக்கு ஏற்புடையதல்ல என்பதை தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், 88 இஸ்லாமிய மதத் தலைவர்களைக் கொண்ட ஈரானின் நிபுணர்கள் குழு பெப்ரவரி 28 தாக்குதலில் தனது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை இழந்த 57 வயதான மொஜ்தாபா காமெனியை "ஈரானியப் புரட்சியின்" புதிய தலைவராகத் தெரிவுசெய்தது.

ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான போரில் முன்னரங்கத்தில் நின்று போரிட்டவரும் குவாம் நகரில் உள்ள மதக்கல்விக் கூடங்களில் இஸ்லாத்தை கற்றவருமான மொஜ்தாபா காமெனி இஸ்லாமியப் புரட்சிகரக் காவலர் படையுடனும் இஸ்லாமிய மதத் தலைவர்களின் கட்டமைப்புடனும் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்திருக்கிறார்.

அவரை நாட்டின் அதியுயர் ஆன்மீகத் தலைவராக தெரிவு செய்ததன் மூலம் தெஹ்ரான் "போருக்கு மத்தியிலும் இஸ்லாமியக் குடியரசு உறுதியாக நிற்கிறது" என்ற சந்தேகத்துக்கு இடமற்ற தெளிவான செய்தியைக் கூறியிருக்கிறது. அயத்தொல்லா காமெனியையும் உயர்மட்ட படைத் தளபதிகளையும் கொலைசெய்த தனது ஆரம்பக்கட்ட செயல் இஸ்லாமிய அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்று டொனால்ட் ட்ரம்ப் நம்பியிருந்தால், அவரது மதிப்பீடு தவறானது.

பதிலாக, அரசின் சகல கிளைகளும் இராணுவத்துக்கும் மதத் தலைவர்களுக்கும் பின்னால் அணிதிரண்டு நிற்கின்ற அதேவேளை, பாரசீக வளைகுடாவில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மற்றும் எரிசக்திக் கட்டமைப்புக்கள் மீதும் இஸ்ரேல் மீதும் தாக்குதல்களை நடத்தியதன் மூலமாக போரை ஈரான் பிராந்திய அளவில் பரவலாக்கியிருக்கிறது.

இப்போது புதிய ஒரு காமெனி அதிகாரத்தில் இருக்கிறார் எரிசக்தி விலைகள் வானளாவ உயர்ந்துசென்று கொண்டிருக்கின்றன் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் தலைவர்கள் போரில் இருந்து வெளியேறுவதற்கான தந்திரோபாயங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இது முற்றிலும் அநாவசியமான போர். தெஹ்ரானுக்கும் வாஷிங்டனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டிருந்த ஓமான் அணு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படும் தறுவாயில் இருக்கிறது என்று கூறிய சில மணித்தியாலங்களில் இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதல்கதை ஆரம்பித்தன. போரின் இலக்குகள் குறித்து டொனால்ட் ட்ரம்ப் மாறிமாறி ஒவ்வொரு நிலைப்பாடுகளை அறிவித்துக் கொண்டிருந்தார்.

ஈரானிய அரசைத் தூக்கியெறிவதே தனது இலக்கு என்று முதல் நாள் கூறிய அவர் ஐந்தாம் நாள் ஈரானின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதில் தன்னைச் சம்பந்தப்படுத்த வேண்டும் என்றார். பிறகு பதினோராம் நாள், இஸ்ரேல் மீதும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை சரமாரியாக தொடுத்துக் கொண்டிருந்த நிலையிலும் கூட, அமெரிக்கா போரை ஏற்கெனவே வென்றுவிட்டது என்றும் விரைவில் போர் முடிவுக்கு வந்துவிடும் என்றும் அவர் கூறினார்.


அமெரிக்காவிடமும் இஸ்ரேலிடமும். மாபேரளவில் விமானப்படைப் பலம் இருக்கிறது என்பதும் தொடர்ந்து அவை ஈரான் மீது குண்டுமாரி பொழியும் என்பதும் உண்மை. பெப்ரவரி 28 அமெரிக்க ஏவுகணைகள் பெண்கள் பாடசாலை ஒன்றைத் தாக்கியதில் 160 க்கும் அதிகமான மாணவிகள் கொல்லப்பட்டதாக சுயாதீனமான விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது. கடந்த வாரம் இஸ்ரேல் ஈரானின் எண்ணெய்க் களஞ்சிய வசதிகள் மீது நடத்திய தாக்குதல்களை தொடர்ந்து தெஹ்ரான் கரும்புகையினால் சூழப்பட்டிருக்கிறது.

ஆனால், தெளிவாகச் சாதிக்கக்கூடிய அரசியல் இலக்குகள் இல்லாமல் மக்கள் மீது தொடர்ந்து குண்டுவீச்சுக்களை நடத்துவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? இதே மக்களைத்தான் "விடுதலை" செய்யப்போவதாக சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்கா உறுதியளித்தது.

ஈரானிய அரசு சுருண்டு போய்விடவில்லை. அது எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கிறது. டொனால்ட் ட்ரம்பும் பெஞ்சமின் நெதான்யாகுவும் இந்தப் போரைத் தொடருவார்களேயானால், உலகப் பொருளாதாரம் மேலும் கடுமையான நெருக்குதலுக்கு உள்ளாகும். அவர்கள் இருவரும் தங்களது பாரதூரமான தப்புக்கணக்கை விளங்கிக் கொள்கிறார்களோ இல்லையோ, மேலும் குண்டுவீச்சுக்களைத் தொடருவது முன்னோக்கிய பாதை அல்ல. இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

(தி இந்து)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 13 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 29
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். மரியாதைக் கூடும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை அலைச்சலும் இருக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு குறையும். ஈகோ பிரச்சினை வந்து நீங்கும்.

**மிதுனம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வாடிக் கையாளர்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**சிம்மம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். கனவு நனவாகும்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான சலுகைகள் மூலம் போட்டிகளை சமாளிப்பீர்கள். புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபா ரத்தில் சிலமாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத் தில்சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**விருட்சிகம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**தனுசு**
ராசி சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர். பிள்ளைகளிடம் எதிர்மறையாகப் பேச வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கும்பம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் நவீன உத்திகளைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மீனம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

# பிரஜா சக்தி வேலைத்திட்டத்துக்காக 652 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச். 13

யாழ். மாவட்டத்தில் அரசாங்கத்தின் பிரஜா சக்தி வேலைத்திட்டத்துக்காக 870 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சுமார் 652 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

பிரஜா சக்தி தேசிய வேலைத் திட்டம் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் யாழிலுள்ள தந்தை செல்வா அரங்கில் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"எமது அரசாங்கத்தின் பிரஜா சக்தி வேலைத் திட்டம் கிராமப்புறங்களில் வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக கிராம மட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராம மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரஜா சக்தி குழுக்கள் மூலம் அந்தந்த பிரதேசங்களின் தேவைப்பாடுகள் ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

மத்திய அரசாங்கத்திடமிருந்து நேரடியாக 652 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டங்களுக்கு நிதி போதாத இடத்து மாகாண அமைச்சு மற்றும் மத்திய அமைச்சிடம் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்து நிதிகளை விடுவித்துக் கொள்ள முடியும்.

குறித்த திட்டத்தில் பிரதேசங்கள் நீதியாக தனியார் செயல் திட்டங்கள் மற்றும் நிதி பங்களிப்புகளை நேரடியாக பெற்று திட்டங்களை பிரதேச மட்ட நிர்வாகங்களுடன் இணைந்து செயல்படுத்த முடியும்."- என்றார். (எ)

## குருவிச்சையாறு பாலத்துக்கு அருகில் அரிவிவெட்டு சிந்து அறுவடை நிகழ்வு



முல்லைத்தீவு, மார்ச். 13

கற்சிலைமடு பண்டாரவன்னியன் நாடகக் கலாமன்றம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த பாரம்பரிய அரிவிவெட்டுச் சிந்து அறுவடை நிகழ்வு ஒட்டுசுட்டான்- புளியங்குளம் குருவிச்சையாறு பாலத்துக்கு அருகில் உள்ள வயலில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

பண்டார வன்னியன் நாடக கலாமன்றத்தின் போசகர் சி. நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி தி. பிரம்மியாவும் கௌரவ விருந்தினர்களாக தொழிலதிபர்களான இ. கணபதிப்பிள்ளை மற்றும் இ. சத்திய சீலன் ஆகியோரும் விவசாய திணைக்கள அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

## பாம்பு தீண்டி வருமான வரி பரிசோதகர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச். 13


பாம்பு தீண்டி, மாந்தை கிழக்கு பிரதேச சபையின் வருமான வரி பரிசோதகர் உயிரிழந்தார்.

மல்லாவியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இந்த உயிரிழப்பு பதிவானது.

இந்த பரிசோதகர் வயலொன்றை பார்வையிடச் சென்றபோதே பாம்பு தீண்டி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

துணுக்காய் பகுதியைச் சேர்ந்த, ஒரு பிள்ளையின் தந்தையான, திருநாவுக்கரசு கிருபாகரன் (வயது- 55) என்ற வருமான வரி பரிசோதகரே இவ்வாறு உயிரிழந்தார். (எ)

## வாகனம் மோதி முதலை உயிரிழப்பு



யாழ்ப்பாணம், மார்ச். 13

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியில், வலிக்கண்டி பகுதிக்கு அருகாமையில் நேற்றுக் காலை முதலை ஒன்று உயிரிழந்த நிலையில் காணப்பட்டது.

பிரதான வீதியை ஒட்டியுள்ள கரையோர நீர்நிலைகளில் அதிகளவிலான முதலைகள் காணப்படுகின்றன. இவை இரவு நேரங்களில் உடல் வெப்பத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக (சூடு காய்வதற்கு) வீதியோரங்களுக்கு வருவது வழமையாகும்.

இவ்வாறு வீதிக்கு வந்த முதலையை, அந்த வழியாகச் சென்ற வாகனம் ஒன்று மோதியிருக்கலாம் என்றும், அதன் காரணமாகவே முதலை உயிரிழந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. (எ)

# புதுக்குடியிருப்பில் சர்வதேச மகளிர் தினம்





முல்லைத்தீவு, மார்ச். 13

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச மகளிர் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன் விழா மண்டபத்தில் நடைபெற்றன.

முன்னதாக விருந்தினர்கள் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் இருந்து மலர் மாலை அணிவிக்கப்பட்டு மகளிர் குழுக்களின் பாண்ட் வாத்திய இசையுடன் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன் விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து மகளிர் குழுக்களின் இசையும் அசையும் நிகழ்வை தொடர்ந்து விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னுற்பத்தியில் கடும் நெருக்கடி

# நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் ஓகஸ்ட் மாதம் செயலிழக்கும் அபாயம்!

கொழும்பு, மார்ச். 13

இலங்கையின் மின்சக்தி பாதுகாப்பு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. நிலக்கரி கொள்வனவில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களின் பராமரிப்புப் பணிகள் காரணமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் முற்றாகச் செயலிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் உள்ள அமாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்



மேலும் கூறுகையில்,

"இன்று அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான இந்த அரசாங்கத்துக்கு மூன்று விதமான அச்சங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவது அச்சம் என்னவெனில், உண்மை வெளிப்படும் போது ஏற்படுகிறது. அவர்கள் தற்போது எதை செய்தாலும், 2024 செப்ரெம்பர் 21ஆம் திகதிக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் மற்றும் அறிக்கைகள் மீண்டும் வெளியாகும் போது, அவர்களுக்கு அவமானம் ஏற்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆட்சிக்கு வந்து மிகக் குறுகிய காலத்துக்குள், 2025 ஜனவரி மாத இறுதியில் 323 கொள்கலன்கள் தொடர்பான பிரச்னை எழுந்தது. அதில் இரண்டில் ஐஸ் போதைப்பொருள் காணப்பட்டது. அது குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்துவதாகக் கூறினாலும், இன்றுவரை அதற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை." - என்றார்.

(எ)

# பிளாஸ்ரிக் தரம் பிரிக்கும் நிறுவனத்தில் தீ விபத்து

**உயிர்ச்சேதங்கள் தவிர்ப்பு**

கம்பஹா, மார்ச். 13

கம்பஹா - சபுகஸ்கந்த, சியம்பலாபே தெற்கு பகுதியில் அமைந்துள்ள பழைய பிளாஸ்ரிக் பொருட்களை தரம் பிரிக்கும் நிறுவனம் ஒன்றில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று சபுகஸ்கந்த பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மற்றும் பிரதேச வாசிகள் ஒன்றிணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த சம்பவத்தில் உயிர்ச்சேதங்களோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சபுகஸ்கந்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

# "எரிபொருள் விலை உயர்வு: வழக்கு தொடரவேண்டும் "

கொழும்பு, மார்ச். 13

குறைந்த விலைக்கு கொண்டுவந்த எரிபொருளை அதிக விலைக்கு விற்பனை செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்கத்துக்கு எதிராக வழக்கு தொடுக்க வேண்டும். ஒரு மாதத்துக்கு தேவையான எரிவாயு இருப்பதாக அரசாங்கம் தெரிவித்த நிலையிலேயே தற்போது எரிவாயு விலையை அதிகரித்து மக்களை நடுத்தெருவுக்கு கொண்டுவந்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# சுரேஷ் சாலேவை பாதுகாக்க சத்தியாக்கிரக போராட்டம்

**விமல் வீரவன்ஸ தெரிவிப்பு**

கொழும்பு, மார்ச். 13

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலேவை சிறைக்கூண்டுக்குள் வைத்து கொலை செய்வதற்கு முயற்சிக்கப்படுகிறது. சுரேஷ் சாலேவை பாதுகாப்பதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட தயாராகவுள்ளோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# நீதித்துறைக்கு கௌரவம் வழங்குவது மிக அவசியம்

**தலதா அத்துகோரள தெரிவிப்பு**

கொழும்பு, மார்ச். 13

சட்டத்தின் ஆட்சி, நீதித்துறை சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டுமாயின், நீதித்துறைக்குத் தேவையான கௌரவத்தையும் மரியாதையையும் வழங்குவது மிகவும் அவசியமானதாகும். அந்த வகையில் அமைச்சர் குமார ஜயக்கொடி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பை முழு நாடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமாரி ஹோட்டலில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(எ)

# இரட்டைக் கொலை சம்பவம்: பெண் உட்பட இருவர் கைது!

அம்பாந்தோட்டை, மார்ச். 13

பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் போலி அடையாள அட்டையுடன் அம்பாந்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தங்காலை - கொன்னொருவ பகுதியில், அம்பாந்தோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குற்றத்தடுப்பு வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, சந்தேகத்துக்கிடமான ஜீப் ரக வாகனமொன்றை நிறுத்தி சோதனை செய்தனர்.

குறித்த வாகனத்தைச் செலுத்திய நபரிடம் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை. அவர் பொலிஸாரிடம் சமர்ப்பித்த அடையாள அட்டை போலியானது என விசாரணையில் உறுதியானது.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட சோதனையில், சந்தேகநபரிடமிருந்து 21 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

அவருடன் பயணித்த பெண்ணிடமிருந்து 05 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் ஜீப் ரக வாகனத்துடன் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தணமல்வில மற்றும் வீரவில பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 33 வயதுடைய தம்பதியினர் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபரிடம் நடத்திய மேலதிக விசாரணையின்போது, கடந்த 2016ஆம் ஆண்டு சூரியவெவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இரட்டை கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் என தெரியவந்துள்ளது.

(எ)

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT TATA sky dishtv VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும்
இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க,
இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
Telecommunications Regulatory Commission of Sri Lanka
155 செனல்கள் 1420/- ரூபா (அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு
0707 888 999 நிபந்தனைக்கு உட்பட்டது.
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிக்க சிலர் தீவிர முயற்சி செய்கிறார்கள்

## அமைச்சர் சந்திரசேகர் சாடல்

மட்டக்களப்பு, மார்ச். 13

அநுர அரசாங்கம் இல்லையென்றால் "டித்வா" புயல் மற்றும் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளினால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பது மக்களுக்கு தெரியும். அரசியல்வாதிகள் இன்று குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிக்க முயற்சிக்கின்றனர் என்று கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

"டித்வா" புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நஷ்டஈடு மற்றும் புதிய படகுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"கடந்த காலங்களில் சுனாமி அனர்த்தம், வெள்ள அனர்த்தங்களில் மக்களுக்கு நஷ்டஈடு வழங்காமல் அன்று அந்த நிதிகளை அரசியல்வாதிகள் கொள்ளையிட்டனர். கடந்த காலங்களில் அரசியலுக்கு வந்தவர்கள் பலர் இன்று செல்வந்தர்களாக காணப்படுகின்றனர். அவர்களுக்கு இந்த பணம் எவ்வாறு வந்தது என்று மக்களுக்கு தெரியும்.

நாங்கள் சிறந்த அரசியலை முன்னெடுப்பதன் மூலமே இவ்வாறானவர்கள் எங்களை ஆட்சி செய்வதை தடுக்கமுடியும். சிறந்த அரசியலை முன்னெடுப்பதன் மூலமே மக்களின் அன்றாட பிரச்னைகளை தீர்க்கமுடியும். கடந்தகாலத்தில் இடம்பெற்ற கொள்ளைகளை நிறுத்தப்பட்டதன் காரணமாகவே இன்று அந்த பணத்தினைக்கொண்டு மக்களுக்கான அபிவிருத்திகளை முன்கொண்டு செல்லமுடிகின்றது.

வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போர் நெருக்கடிகள் இங்கும் தாக்கத்தினை செலுத்துகின்றன. எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த நெருக்கடி இலங்கைக்கு மட்டுமான நெருக்கடி அல்ல, உலக நாடுகளுக்கான நெருக்கடி.

இந்த நாட்டில் ஒரு மாதத்துக்கான எரிபொருட்களையே சேமிக்க முடியும். நாங்கள் தற்போது ஆறு மாதங்களுக்கான எரிபொருட்களை சேகரித்து வைப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆனால், இன்றைய நிலைமையினை வைத்து அரசியல்வாதிகள் குளம்பிய குட்டைக்குள் மீன்பிடிக்கும் செயல்பாட்டினை முன்னெடுத்துவருகின்றனர்."- என்றார். (எ)

# மட்டக்களப்பு, அம்பாறையில் பல தடவைகள் மழை பெய்யும்

கொழும்பு, மார்ச். 13

ஊவா மாகாணத்திலும் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது- இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# முன்னாள் சிப்பாய் வீட்டிலிருந்து வெடிபொருட்கள், சீருடைகள் மீட்பு



பொலநறுவை, மார்ச். 13

பொலநறுவை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, ஹிங்குராக்கொட பகுதியிலுள்ள முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரின் வீட்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது, பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன.

அரலகங்வில விசேட அதிரடிப்படையினரால் நேற்று அதிகாலை இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டது. (எ)

# முன்பள்ளி ஆசிரியர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, மார்ச். 13

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்கள் சார்பில் திருகோணமலை வலய முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று முன்தினம் காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த ஆசிரியர்கள், பின்னர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஆளுநரிடம் கையளித்தனர். (எ)

## மாணிக்கக்கல் அகழ்வு: 3 சந்தேகநபர்கள் கைது

நுவரெலியா, மார்ச். 13

பொகவந்தலாவை - செப்பல்டன் பகுதியில், அனுமதிப் பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொகவந்தலாவை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் மேற்கொண்ட விசேட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் பொகவந்தலாவை பகுதியை சேர்ந்த 38, 42 மற்றும் 58 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ)

# எரிபொருள் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசிடம் எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச். 13

அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலையை மீண்டும் குறைக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். பழைய கையிருப்புகளுக்கு இவ்வாறு எரிபொருள் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் நுகர்வோருக்கு கடுமையான அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஒரு பீப்பாய் எண்ணெய் 70 அமெரிக்க டொலராக காணப்படும் போது இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் கையிருப்புகளுக்கு மத்திய கிழக்கு போர்ச்சூழல் நிலைமையை பயன்படுத்தி விலை சூத்திரத்தை மாற்றி, அதிக விலை அறவிடுவது மிகவும் ஊழல் நிறைந்த செயலாக காணப்படுவதோடு, கடும் தவறான நடவடிக்கையாகவும் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வதேச சந்தையில் அதிகரித்த எண்ணெய் விலை சில மணிநேரங்களிலேயே மீண்டும் வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பதாகவும், ஒரு பீப்பாய் எண்ணெய் விலை, இருந்ததை விட மேலும் குறைந்து கொண்டிருப்பதால் இந்த விலை அதிகரிப்பை நியாயப்படுத்த முடியாது என்றும் சஜித் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# "கல்வி அபிவிருத்திக்காக பெருமளவு நிதி ஒதுக்கீடு"

மட்டக்களப்பு, மார்ச். 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்காக இந்த ஆண்டு 529 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் தேசிய பாடசாலைகளுக்கே அதிகளவான நிதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில் இம்முறை பல பாடசாலைகளுக்கு பெருமளவான நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலத்தில் தேசிய பாடசாலைகளுக்கு மட்டுமே அதிகளவான நிதிகளை அக்காலத்திலிருந்த ஆட்சியாளர்கள் ஒதுக்கிவந்தார்கள். ஆனால், இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மாகாண சபையினூடாக 350 மில்லியன் ரூபாயும் மத்திய அரசாங்கம் ஊடாக 179 மில்லியன் ரூபாய்களும் மொத்தமாக 529 மில்லியன் ரூபாயை நாங்கள் கல்விக்காக ஒதுக்கீடு செய்திருக்கின்றோம்.

கட்டடங்களை திருத்துவதற்காகவும் பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் இந்த நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். இன்னும் பல வேலைத்திட்டங்களை கல்வி அபிவிருத்திக்காக செயல்படுத்தவுள்ளோம்.

கல்வி என்பது மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஒரு சுமையாக அமைந்துவிடக்கூடாது என்பதில் இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது."- என்றார்.

# குஷ் ரக போதைப்பொளுடன் பல்கலை. மாணவன் கைது!

கண்டி, மார்ச். 13

கண்டி - பேராதனை பகுதியில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஹஷிஷ் மற்றும் குஷ் ரக போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 85 கிராம் 260 மில்லிகிராம் ஹஷிஷ் மற்றும் 11 கிராம் 210 மில்லிகிராம் குஷ் ரக போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த நபர் ஹோகந்தர பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய பல்கலைக்கழக மாணவர் என தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

வீடமைப்புத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இன்றி, முற்று முழுதாகச் சுயாதீனமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நாம் செயற்பட்டிருக்கின்றோம், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைமவாக, "தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2026" எனும் தொனிப்பொருளின் கீழ் மாகாண சபைகளின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாடு முழுவதும் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதற்கமைவாக, வடக்கு மாகாணத்துக்குரிய ஆரம்ப நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில், மாந்தை கிழக்கு பிரதேச சபையில் வருமான வரிப் பரிசோதகராகப் பணியாற்றி, நேற்று முன்தினம் பாம்பு தீண்டி அகால மரணமடைந்த திருநாவுக்கரசு கிருபாகரனின் ஆத்ம சாந்திக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விசேட உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் வீடற்றவர்கள் என்று எவருமே இருக்கக் கூடாது என்பதுதான் தற்போதைய அரசாங்கத்தின் பிரதான கொள்கையாகவுள்ளது. இதனைப் பல்வேறு அமைச்சுக்களும் மாகாண சபைகளும் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்த ஆண்டு 31,000 வீடுகள் இவ்வாறு அமைக்கப்படவுள்ளன. வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக நாம் முன்னெடுக்கும் இந்த வீட்டுத்திட்டத்தில், எங்கு தேவைப்பாடுகள் அதிகமாக உள்ளனவோ அங்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம். வீட்டுத்திட்டங்கள் கோரி எனக்குக் கிடைக்கப் பெறும் கோரிக்கைகளை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி, அவர்கள் பொருத்தமான பயனாளிகள்தானா என்பதைக் களப் பயணங்கள் ஊடாக உறுதிப்படுத்திய பின்னரே வீடுகளை வழங்குகின்றோம். அத்துடன், பிரதேச செயலாளர்கள் ஊடாகவும் அதனை மேலதிகமாக உறுதிப்படுத்துகின்றோம். இவ்வாறாக மிகவும் வெளிப்படைத்தன்மையுடனேயே பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் வீட்டுத்திட்டங்களுக்கான பயனாளிகள் பட்டியல் அமைச்சர்களிடமிருந்தே வரும். ஆனால், எமது இந்த வீட்டுத்திட்டத்துக்குரிய எந்தவொரு பயனாளியையும் அமைச்சர்களோ அல்லது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களோ தெரிவு செய்யவில்லை. முற்று முழுதாகச் சுயாதீனமாக எமது அரச அதிகாரிகளாலேயே இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டது - என்றார்.

வடக்கு மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து 151 மில்லியன் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்கீழ், தலா 1.8 மில்லியன் ரூபா பெறுமதியில் 75 புதிய வீடுகளும், தலா 0.5 மில்லியன் ரூபா செலவில் 32 வீடுகள் திருத்தப்படவும் உள்ளன. இதற்கமைவாக, மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கான காசோலைகள் இந்த நிகழ்வில் வைத்து அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. ஏனைய பயனாளிகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாந்தை கிழக்கு பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரத்தில் ஒரு வீட்டுக்கும், வன்னிவிளாங்குளம் பகுதியில் 3 வீடுகளுக்குமாக அடிக்கற்களும் நடுகை செய்யப்பட்டன. (அ)

## இந்திய டிஸ்...

சட்டவிரோதமாக பணம் செலுத்துவதோ தண்டனைக்குரிய குற்றமாகும். சன் டிறக்ற், வீடியோ கோன், டாட்டா ஸ்கை, டிஸ் ரிவி என்ற பெயர்களில் இந்தியாவில் இயங்கும் சேவைகளை பார்வையிடுவதற்கான உபகரணங்களை சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வந்து நாடு முழுவதும் பலர் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பல கோடி ரூபா இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது.

இந்த சேவையை இவ்வாறு சட்டவிரோதமாக விற்பனை செய்பவர்களையும் பயன்படுத்துபவர்களையும் கண்டறிந்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பொலிஸாருக்கு பணித்திருக்கின்றது.

இதனையடுத்தே இவ்வாறு சட்டவிரோத விற்பனையில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களையும் அவற்றைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களையும் சோதனையிட்டு அவர்கள் மீது வழக்கு தொடர பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (அ)

## யாழ்.பழைய...

காலை இந்த உத்தரவை விடுத்திருக்கின்றது.

யாழ். பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கைப் பரிசீலித்த யாழ். மாவட்ட நீதிமன்றம், முதலில் அந்தக் கட்டுமானத்துக்கு எதிராக இரண்டு வார கால இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வழங்கி இருந்தது. எனினும் பின்னர் அந்த இரண்டு வார காலம் முடிவடைந்ததும், புதிய சட்ட வாதங்கள் எதனையும் செவிமடுக்காமல், தன்பாட்டில் அந்த இடைக்காலத் தடை உத்தரவை நீடிக்காமல் விடுக்கும் கட்டளையை மாவட்ட நீதிமன்றம் வழங்கி இருந்தது.

அதற்கு எதிராக மனுதாரர்கள் சார்பில் வடக்கு மாகாண மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடும் மீளாய்வு முறையீடும் செய்யப்பட்டன. அந்த இரண்டு மனுக்களையும் மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதாடியிருந்தார்.

இந்த விவகாரத்தை ஒட்டி தன்னுடைய கட்டளையை மேன்முறையீட்டுக்கான மேல்நீதிமன்றம் நேற்று வழங்கி இருக்கின்றது. இந்த மேன்முறையீடு மற்றும் மீளாய்வு மனுக்கள் மீதான விசாரணை முடியும் வரை மேற்படி கட்டுமானத் துக்கு எதிரான இடைக்காலத் தடை தொடர்த்து நீடிக்கும் என்று மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றம் தன்னுடைய நேற்றைய உத்தரவில் தெளிவாகக் கட்டளை பிறப்பித்திருக்கின்றது.

இந்த மீளாய்வு மனுத் தொடர்பாக பதில் மனுத் தாக்கல் செய்வதற்கு வாய்ப்பு அளித்து எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் மேன்முறையீட்டு மனுவும் தொடர்ந்து விசாரணைக்கு முன்னெடுப்பதா என்பது குறித்து தீர்மானிப்பதற்காக மன்றில் எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் திணுக்கா சுந்தரராஜன், மகாதேவன் ரஜீவன், ரவிக்குமார் மயூரி, கணபதிப்பிள்ளை பிரபாகரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி மன்றில் வாதாடியிருந்தார். (அ)

## மயிலிட்டி...

விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

அமைச்சருடன் வடமராட்சி அமைப்பாளர் எஸ்.கணேசரூபன் மற்றும் தெல்லிப்பளை அமைப்பாளர் பிரகாஷ் ஆகியோரும் சென்றிருந்தனர். (அ)

## பொலிஸ் சூட்டில்...

வழிமறித்தபோது பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வாகனச் சாரதியான 17 வயது சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளான்.

குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அதன் போது , உயிரிழந்த சிறுவனின் குடும்பத்தினர் சார்பாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் 06 இற்கும் மேற்பட்டோர் மன்றில் முன்னியாகி, சிறுவனின் கொலை தொடர்பில் யாழ் . மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் திருப்தி இல்லை என மன்றில் சுட்டிக்காட்டி, வழக்கு விசாரணைகளை கொழும்பில் உள்ள குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கவேண்டும் என மன்றில் சமர்ப்பணங்களை முன் வைத்தனர்.

அதற்கு பொலிஸ் தரப்பில் கடுமையான ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டன. அதனால் கடுமையான வாதப் பிரதிவாதங்களை அடுத்து விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றுமாறு மன்று உத்தரவிட்டது.

அதேவேளை நேற்றைய வழக்கு விசாரணைகளின் போது, பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள சட்டத்தரணிகள் என 20 இற்கும் மேற்பட்டோர் நீதிமன்றுக்கு சமுகமளித்திருந்தனர்.

அத்துடன் நேற்றைய வழக்கு விசாரணையின்போது, சம்பவத்துடன் தொடர்புடைய வாகனத்தினுள் இருந்து துப்பாக்கி ரவையின் வெற்றுக்கோது ஒன்றினை மீட்டதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று தடயவியல் பொலிஸாரினால் மீட்கப்படாத துப்பாக்கி ரவையின் வெற்றுக்கோது தற்போது மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவது சந்தேகத்திற்கு உரியது என பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து மன்றில் முன்னியான சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனையை மன்றில் தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சம்பவம் நடைபெற்று ஒரு மாத காலப் பகுதி கடந்தும் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சுரேஷ் சாலே...

மேற்படி தகவலை வெளியிட்டனர். இது தொடர்பில் 25 பக்க அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுணதீவில் இரண்டு பொலிஸாரின் கொலைகள் மற்றும் சாய்ந்தமருது குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளை தவறாக வழிநடத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பாக, சுரேஷ் சாலே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேக நபராக தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர், கடுவாபிட்டிய தேவாலயத்தை இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு அடையாளம் காட்ட, ஒரு புலனாய்வுத் தகவல் வழங்குபவரைப் பயன்படுத்தியதாகவும், சுரேஷ் சாலே மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, சாரா ஜஸ்மின் மரணத்தை உறுதிப்படுத்த நடத்தப்பட்ட இரண்டு மரபணுப் சோதனைகள் தோல்வியடைந்த நிலையில், மூன்றாவது மரபணுச் பரிசோதனையை நடத்துமாறு சாலே, புலனாய்வாளர்களுக்கு அழுத்தம் கொடுத்ததாகவும், குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளை சாலேயின் சட்டத்தரணி நிராகரித்தார், ஈஸ்டர் தாக்குதல்கள் நடந்த நேரத்தில் அவர் இலங்கையில் இருக்கவில்லை என்றும் மலேசியாவில் இருந்தார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வழக்கை விசாரித்த கோட்டை நீதிவான் இசுரு நெத்திகுமார மேலதிக அறிக்கைகளை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கை மார்ச் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (அ)

## மத்திய கிழக்கு...

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவரிடம் முன்வைக்கப்பட்ட கேள்விகளும், அவர் வழங்கிய பதில்களும் வருமாறு -

கேள்வி: தற்போதைய அரசாங்கம் பௌத்த சாசனத்திற்குச் செய்யும் சேவை குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: அவர்கள் ஏதாவது சேவை செய்கிறார்களா?

கேள்வி: பௌத்த சாசனம் இரண்டாம் பட்சமாக நடத்தப்படுவதாகக் கருதப்படுகிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில் அதை எவ்வாறு நடத்தினீர்கள்?

பதில்: நாங்கள் அதனை உயர் நிலையில் வைத்திருந்தோம். இப்போது அவ்வாறு செய்யப்படுகிறதா என்பதே கேள்விக்குறிதான்.

கேள்வி: உங்கள் ஆட்சிக்காலத்தில் பணியாற்றிய புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் மனிதாபிமானமற்ற முறையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: அவர் ஆற்றிய சேவையை மதிப்பதே ஒழிய, அவரைச் சிறையில் அடைப்பதல்ல செய்யவேண்டியது. இது சிறையில் அடைக்கும் காலம் அல்ல.

கேள்வி: தற்போது சர்வதேச போர் ஒன்று நடைபெறுகிறது. இது நீண்ட காலம் நீடித்தால் நாட்டின் எதிர்காலம் என்னவாகும் என நினைக்கிறீர்கள்?

பதில்: இது ஒரு சிக்கலை உருவாக்கும். நாட்டிற்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் பாரிய சிக்கல் ஏற்படும்.

கேள்வி: நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது குறித்து சொல்ல எதுவும் இல்லை. என்னை விட நாட்டு மக்கள் இதைப் பற்றி நன்றாக அறிவார்கள். (அ)

## இந்தியாவிடம்...

கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய ரீதியிலான எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும் இந்த உதவி கோரப்பட்டுள்ளது. இந்த விநியோகம் தொடர்பான மேலதிக இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

## மாற்றுத்திறனாளி...

ரூபா முதலீட்டில் முதற்கட்டமாக 10 நவீன தாழ்தள குளிரூட்டப்பட்ட பேருந்துகள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்த பேருந்துகள் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துவோர் எவ்விதத் தடையுமின்றி ஏறி இறங்கும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பேருந்திலும் 33 ஆசனங்கள் உள்ளதோடு, 80 பயணிகள் வரை பயணிக்க முடியும். சக்கர நாற்காலியில் பயணிப்போருக்கான விசேட பாதுகாப்பு வசதிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாக்கும்புர பன்முக போக்குவரத்து மத்திய நிலையத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ள இச்சேவை, காலை மற்றும் மாலை வேளைகளில் 40 நிமிடங்களுக்கு ஒருமுறை மாக்கும்புர - கோட்டை, மாக்கும்புர - கடவத்தை ஆகிய இடங்களுக்கு இயக்கப்படும் குறிப்பாக, மஹரகம அபேக்ஷா மருத்துவமனை மற்றும் கொழும்பு தேசிய மருத்துவமனை போன்ற முக்கிய சுகாதார நிலையங்களை இணைக்கும் வகையில் இந்த வழித்தடங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

இச்சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்குப் பயணிகளுடன் தொடர்புகொள்வதற்கான அடிப்படை சைகை மொழி, பாதுகாப்பு மற்றும் தொழில் சார் அறம் குறித்த விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், பேருந்து தரிப்பிடங்கள் மாற்றுத்திறனாளிகள் இலகுவாகப் பயன்படுத்தும் வகையில் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மின்சார சபையின் மறுசீரமைப்பில் ஊழியர் உரிமை பாதுகாக்கப்படும்!



கொழும்பு, மார்ச் 13

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்புச் செயல்முறை குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

நுகர்வோருக்கு நியாயமான விலையில், வினைத்திறனான மற்றும் தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்துவதே இதன் பிரதான நோக்கம் என ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன், புதிதாக உருவாக்கப்படவுள்ள நிறுவனங்களின் உரிமையை அரசாங்கத்தின் கீழ் பேணுவதன் மூலம், நாட்டின் வலுசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மறுசீரமைப்புச் செயல்முறையின் போது, ஊழியர்களின் தற்போதைய அனைத்து உரிமைகளும் புதிய நிறுவனக் கட்டமைப்பிற்குள்ளும் உறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

இது ஒரு நீண்டகால மற்றும் திட்டமிடப்பட்ட கடினமான செயல்முறை எனக் குறிப்பிட்ட அவர், இந்த மாற்றத்தின் போது ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே சிறந்த புரிதல் இருக்க வேண்டியது அவசியம் என்றார்.

இதற்காக முறையான தொடர்பாடல் வழிமுறையொன்றை உருவாக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஊழியர்கள் மன நிம்மதியுடனும், எதிர்கால எதிர்பார்ப்புகள் குறித்த நம்பிக்கையுடனும் பணியாற்றுவதற்கான சுதந்திரமான சூழலை உருவாக்க அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

மின்சார சபையாக இருக்கும் போதே தீர்க்கப்படாமல் உள்ள நீண்டகாலப் பிரச்னைகள் குறித்தும் இதன்போது ஆலோசிக்கப்பட்டது. அனைவரும் ஒன்றிணைந்து நாட்டுப்பற்றுடன் செயற்படுவதன் மூலம் எழும் சவால்களை முறியடிக்க முடியும் என அவர் அழைப்பு விடுத்தார்.

அரசாங்கத்தின் இந்த மறுசீரமைப்பு மாற்றத்தின் அவசியத்தைத் தாங்களும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த பொறியியலாளர் சங்கப் பிரதிநிதிகள், எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கு அரசாங்கத்துடன் புரிந்துணர்வுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் உறுதியளித்தனர். (அ)

# மத்திய கிழக்கு நெருக்கடியால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கம் குறித்து ஆராய்ந்தார் சஜித்!



கொழும்பு, மார்ச் 13

உக்கிரமடைந்து வரும் மத்திய கிழக்கு நெருக்கடியால் அதிகரித்து வரும் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபாயங்கள் தொடர்பில் கலந்துரையாட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வெளியுறவுக் கொள்கை நிபுணர்கள், முன்னாள் வெளியுறவுக் கொள்கை அதிகாரிகள் மற்றும் சர்வதேச உறவுகள் துறைசார் புத்திஜீவிகளுடன் கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் அவசர சந்திப்பொன்றை நேற்று கூட்டினார்.

4.1 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டிய பொருளாதார இழப்புகளை ஏற்படுத்திய, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 4 வீதமளவில் பாதிப்புகளை ஏற்படுத்திய டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவிற்குப் பிறகு இலங்கை மீட்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என இந்தக் கலந்துரையாடலின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வேகமாக அதிகரித்து வரும் மோதல்கள் இப்போது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை நேரடியாகப் பாதித்து வருவதாகவும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார். கடந்த வாரம், மார்ச் 4ஆம் திகதி, காலி கடற்பரப்பில் இருந்து 19 கடல் மைல் தொலைவில் ஈரானிய போர்க்கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலான ஐரிஸ் டேனாவை மூழ்கடித்தது. இந்த மூழ்கிய சம்பவத்தால், இது இலங்கைக்கு ஆபத்தான முறையில் நெருக்கமாகிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இங்கு சுட்டிக்காட்டினார். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரான் தெளிவாக உறுதிப்படுத்திய அமெரிக்கா!

## பொதுன பெரமுன சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 13

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிம் என்பதையும், அந்தத் தாக்குதல் ஐ.எஸ்.ஐ.எஸ். கொள்கையால் வழிநடத்தப்பட்டதாகவும் அமெரிக்காவின் எப்.பி.ஐ விசாரணைகள் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இலங்கையில் சிலர் தற்போது முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டவை என்றும் அவை வேடிக்கையான குற்றச்சாட்டுகளாகும் என்றும் விமர்சித்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் ஐந்து அமெரிக்கப் பிரஜைகள் உயிரிழந்ததன் காரணமாக, அமெரிக்க சட்டங்களுக்கு அமைவாக அந்நாட்டு நீதிமன்றத்தில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விசாரணைகளின் போது எப்.பி.ஐ. அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான சத்தியப் பிரமாணக் கடிதம் தாக்குதல் நடத்தப்பட்ட இடங்கள், தாக்குதலாளிகளின் தொலைபேசி தரவுகள், டிஜிற்றல் சாதனங்கள், வீடியோ பதிவுகள் மற்றும் பயிற்சி முறைகள் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில், சஹ்ரான் ஹாஷிம் என்பவரே இந்தத் தாக்குதலின் பிரதான மூளையாகவும் தலைவராகவும் செயற்பட்டுள்ளார் என்பது ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# வாக்குறுதிகளுக்கு முரண்பாடாக செயற்படுகின்றது அநுர அரசு!

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 13

தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்தபோது வழங்கிய வாக்குறுதிகளுக்கும், தற்போது முன்னெடுத்து வரும் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் இடையே பாரிய முரண்பாடுகள் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள் ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்த தன்னிடம் "எண்ணெய் கிணறுகள் இல்லை" என ஜனாதிபதி தெரிவிக்கிறார். இந்த யதார்த்தம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே தெரிந்திருக்க வேண்டும். அன்று துறைமுகத்தில் எரிபொருளை இறக்கும்போது விதிக்கப்படும் அதிகப்படியான வரிகளே விலை உயர்வுக்குக் காரணம் என்று கூறியவர்கள், இன்று உலகச் சந்தை நிலவரத்தைக் காரணம் காட்டி தப்பிக்கப் பார்க்கிறார்கள்.

அண்மையில் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையை நிலைகுலையச் செய்துள்ளன. பழைய கையிருப்பில் உள்ள எரிபொருளுக்கே 24 ரூபா வரை விலை உயர்த்தப்பட்டிருப்பது தம்மால் தாங்கிக் கொள்ள முடியாத சுமை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் விலையைத் தீர்மானிப்பது அரசாங்கம் அல்ல, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுமே என்று அரசாங்கம் கூறுவது அப்பட்டமான பொய்யாகும். தனியார் துறையினரின் இலாபத்தை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என ஜனாதிபதி கூறுவது, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு முற்றிலும் முரணானது.

அரசாங்கம் தேர்தல் காலத்தில் கூறியது போல விலைகளைக் குறைக்கவோ அல்லது முறையான நிர்வாகத்தை முன்னெடுக்கவோ முடியாவிட்டால், இதனைப் புறக்கோட்டை வர்த்தகர் ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டிற்குச் செல்வதே சிறந்த முடிவாகும் - என்றார். (அ)

# பொதுவெளியில் அநாகரீகமாக நடந்த இலங்கையர் குற்றவாளி!

## இங்கிலாந்து நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், மார்ச் 13

இங்கிலாந்தின் சவுதாம்ப்டன் பகுதியில் உள்ள "ஹைபீல்ட் ஹவுஸ்" புகலிட கோரிக்கையாளர்கள் தங்கும் விடுதியில் ஊழியர்களைத் தாக்கியதுடன், பொது வெளியில் அநாகரீகமாகத் தன் உடலை வெளிப்படுத்திய இலங்கையர் ஒருவரை போர்ட்ஸ்மவுத் கிரவுன் நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்துள்ளது.

கடந்த 2025 ஒகஸ்ட் 15 ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவத்தின்போது, தனது தொலைபேசி இயங்கவில்லை என்ற கோபத்தில் விடுதியின் வரவேற்பறைக்குச் சென்ற 38 வயதுடைய குறித்த நபர், அங்கு பணியாற்றிய ஊழியர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, "நான் இலங்கையைச் சேர்ந்தவன், இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த சிறிய மனிதர்களான நீங்கள் எனக்கு மரியாதை கொடுக்கவேண்டும்" என இனரீதியான கருத்துக்களைத் தெரிவித்ததுடன், ஊழியர்களைத் தாக்கி அநாகரீகமான முறையில் தனது ஆடைகளை அவிழ்த்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியுள்ளார்.

இந்த வழக்கின் விசாரணையின் போது, ஊழியர்களைத் தாக்கிய இரண்டு குற்றச்சாட்டுகளை குறித்த நபர் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்தார்.

அநாகரீகமாக நடந்துகொண்ட குற்றச்சாட்டு தொடர்பான சி.சி.ரி.வி. ஆதாரங்களை ஆய்வு செய்த நீதிபதிகள் குழாம், அவர் மீதான குற்றத்தை உறுதி செய்து தீர்ப்பளித்தனர்.

தான் அநாகரீகமாக நடந்து கொண்டதை அவர் மறுக்கவில்லை என்றாலும், மற்றவர்களை அச்சுறுத்தும் நோக்கம் தனக்கு இருக்கவில்லை என அவர் தரப்பில் வாதிடப்பட்டது.

இந்த சம்பவத்தால் அங்கிருந்த ஊழியர்கள் மிகுந்த அச்சமடைந்ததாகத் தெரிவித்த நிலையில், நீதிமன்ற நடவடிக்கைகளின்போது அவருக்குத மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியும் வழங்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.